**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.136/2022</u>**

பெயர்–திரு.சுப்பிரமணியம் நாள்.17.03.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 :1 முதல் 4 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

வழக்கு 2–ம் அயிட்டச் சொத்தான வண்டித்தடத்தின் க.ச.எண்.96/14–ல் உள்ளது என்றால், சரிதான். வழக்கு 2–ம் அயிட்டச் சொத்தில் எனக்கு வண்டித்தடம் இருப்பதாக எனது ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். தாவா 1–ம் அயிட்டச் சொத்திற்கு தென்புறமாக மெயின்ரோட்டிலிருந்து வாய்க்கால் புறம்போக்கு வண்டித்தடம் செல்கிறது என்றால், சரிதான். நான் மேற்படி வாய்க்கால் புறம்போக்கு வண்டித்தடத்தைத்தான் பயன்படுத்தி வருவதாகவும், தாவா 2–ம் அயிட்டச் சொத்தான வண்டித்தடத்தை நான் பயன்படுத்தவில்லை பிரதிவாதிகள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், சரிதான். நான் கலைமகள் சபாவிற்கு விற்பனை செய்த ஆவணத்திலும் மேற்படி 2–ம் அயிட்டச் சொத்தான வண்டித்தடம் பற்றி குறிப்பிட்டு கிரைய ஆவணத்தில் எழுதவில்லை என்றால், சரிதான். நான் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனுதாக்கல் செய்துவிட்டு, அம்மனுவை அனுமதிக்கவிட்டால் மாற்றுப்பாதை தெரிந்துவிடும் என்பதால்தான் வேண்டுமென்றே அம்மனு தள்ளுபடி ஆக விட்டுவிட்டேன் என்றால், சரியல்ல. அம்மனுவை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை என்றால், சரிதான். தாவா 2–ம் அயிட்டச் சொத்தை நான் ஒருபோதும் அனுபவிக்கவில்லை என்றாலும், அதில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.17 09:58:00 +0530

District Munsif